செய்தி வெளியீடு: 27 நாள்: 16.06.2021

## பெரம்பலூர் மாவட்டம்

### எறையூர் நரிக்குறவர் காலனியில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டார்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், எறையூர் கிராமத்தில் உள்ள நரிக்குறவர் காலனியில் வசிக்கின்ற நரிக்குறவ இன மகளிர் சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு, மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடினார்.

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

எறையூர் கிராமத்தில் நரிக்குறவர் காலனியில் அந்த இனத்தைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அவர்களின் சமூக மேம்பாட்டிற்காக சுய உதவிக் குழுக்கள் அமைத்து அரசின் மூலம் சுயதொழிற்கடன் மற்றும் பெருங்கடன் வழங்கப்பட்டு அவர்கள் சுயதொழில் செய்து வருகின்றனர். அவர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பதற்கான ஒருங்கிணைந்த விற்பனைக் கூடம் ஏற்படுத்துதல், அனைத்து தர மக்களும் விரும்பும் வகையிலான உற்பத்திப் பொருட்களை உருவாக்குதல், விற்பனைப் பொருட்களை அமேசான், ப்லிப்காட் போன்ற இணையதள விற்பனைதளம் மூலம் விற்பதற்கு வசதி ஏற்படுத்துதல், ஆன்லைன் மூலம் விற்பனை செய்வதற்காக தனி இணையதளம் உருவாக்குதல், கோவில், பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களில் தனியாக விற்பனை செய்வதற்காக இடவசதி ஏற்படுத்துதல், மகளிர் சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களை அரசு நிறுவனங்கள் மூலம் கொள்முதல் செய்து அனைத்து இடங்களுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்தல் போன்றவை குறித்தும்,

மேலும், நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்தவர்கள் தொழிற்காரணங்களாக பிற இடங்களுக்குச் சென்று நீண்ட நாட்கள் தங்குவதால் வீட்டில் உள்ள முதியோர்களை பராமரிப்பதில் ஏற்படும் இடையூறு, குழந்தைகள் இடைநில்லாமல் கல்வி பயில மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், குழந்தை திருமணத்தை தடுத்தி நிறுத்தி, பெண் குழந்தைகள் கல்வி கற்கச் செய்தல், மாற்றுத் தொழிலாக ஓட்டுநர் பயிற்சி, தையல், அடகு கடை பயிற்சி போன்றவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், ஊரடங்கு காரணமாக உற்பத்தி செய்த பொருட்கள் அதிகளவில் தேக்கத்தில் உள்ளதை விற்பனை செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், மகளிர் சுய உதவிக் குழுவினர் பிற தனியார் வங்கிகளில் பெற்ற கடன் தொகையின் தவணை தொகையினை ஊரடங்கு காலத்தில் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகள், உற்பத்தியாளர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கச் செய்தல், இந்திய அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சியில் கலந்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுதல், உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை பிற மாவட்டங்களிலிருந்து கொண்டு வரும்போது ஏற்படும் இடர்பாடுகளை போக்குதல் மற்றும் நரிக்குறவர் நலவாரியத்தை புதுப்பித்து மீண்டும் அதிக ஈடுபாடுடன் செயல்பட வைத்தல் போன்றவை குறித்து மகளிர் சுய உதவிக்குழுவினருடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. அதன்பேரில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திரு.இரா.கமல்ராஜ், மாவட்ட விற்பனை சங்க மேலாளர் திரு.ஆர்.சங்கர், வட்டாட்சியர் திரு. பாலசுப்பிரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.முரளி உட்பட மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**